Regd with the Registrar of Newspaper for India No. **TN TAM/2007/22101**
Regd. **TN/CC(S)Dn/326/13-15** Date of Publication 25th of Every Month

# GIFTS of the Holy Spirit

2014



தந்தை S. J. பெர்க்மான்ஸ் | ரெவ. டாக்டர். I. ரத்தினம் பால் | பாஸ்டர் காலேப் ஜெயக்குமார் | சகோ. பால்ராஜ் கென்னடி

## திருநெல்வேலியில்

பரிசுத்த ஆவியின் வரங்கள்
4 நாள் வல்லமை பயிற்சி முகாம்

**மே - 1, 2, 3, 4**
வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு

Guest Speaker
**தந்தை S. J. பெர்க்மான்ஸ்**
Resource Persons
**ரெவ. டாக்டர். I. ரத்தினம் பால்**
**பாஸ்டர் காலேப் ஜெயக்குமார்**
**சகோ. பால்ராஜ் கென்னடி**

இடம்: **துதியின் கோட்டை,**
**பாளையங்கோட்டை புதிய பேருந்து நிலையம் அருகில்**
**திருநெல்வேலி.**

தொடர்புக்கு:
**சகோ. பால் சத்தியசிங்**
**93601 22224**

## காட்டாத்துறையில்

பரிசுத்த ஆவியின் வரங்கள்
3 நாள் வல்லமை பயிற்சி முகாம்

**மே - 5, 6, 7**
திங்கள், செவ்வாய், புதன்

Resource Persons
**பாஸ்டர் காலேப் ஜெயக்குமார்**
**சகோ. பால்ராஜ் கென்னடி**


இடம்: **பெத்தேல் மிஷன் சபை,**
**காட்டாத்துறை, கன்னியாகுமரி.**

தொடர்புக்கு:
**தொ.பே: 04651-275384 / 276455**

Owned and Published by: **S. Paulraj Kennedy** from A-1, Deju Plaza, No:2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015. Ph: +91-44-22353500. Printed by **Jolly Peter** at **Sharp Offset Printers.** New no: 96, Old no: 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. Ph: +91-44-28480607. Editor: **Nija Kennedy.**

# கடைசி எக்காளம்

Vol. 7 | ஏப்ரல் 2014 | Issue 7 ரூ.20



# இயேசுவின் இரத்தம்

ஒளி எக்காளம்

Vol. 7 | ஏப்ரல்2014 | Issue 7

ஆசிரியர்:
**நிஜா கென்னடி**

வடிவமைப்பு
பால்@விங்ஸ்
+91-98411 81115

**உங்கள் சந்தாவை புதுப்பித்துவிட்டீர்களா?**

இந்த பத்திரிகை வேண்டுவோர்
சந்தா அனுப்பி பெற்றுக்கொள்ளவும்.

உள்நாட்டு வருட சந்தா **ரூ. 200/**
வெளிநாட்டு வருட சந்தா **ரூ. 2000/**

**S. PAULRAJ KENNEDY** என்ற பெயருக்கு
DD/M.O/Cheque மூலம் அனுப்பவும்.
உங்களது முழுமுகவரியையும் எழுதுங்கள்.
**ICICI** வங்கி வாயிலாகவும்
நீங்கள் அனுப்பலாம்.

**ICICI** வங்கி கணக்கின் பெயர்:
**S. PAULRAJ KENNEDY**
**ICICI** வங்கி கணக்கு எண்:
**0350 0150 7744**
IFSC No: ICIC0000350

தொடர்புக்கு
**KENNEDY MINISTRIES**

**எஸ் பால்ராஜ் கென்னடி**
ஏ-1, டேஜு பிளாஸா, 2 தெற்கு அவென்யூ
ஸ்ரீநகர் காலனி, சைதாப்பேட்டை
சென்னை - 600 015.
தமிழ்நாடு, இந்தியா.
Ph: +91-44-2235 3500
Mobile: +91-9940667881
email: nijakennedy@yahoo.com

WWW.KENNEDYMINISTRIES.ORG

## பெண்கள் உபவாசக் கூட்டம்



**வாரந்தோறும் - வெள்ளிக்கிழமைகளில்**

**காலை 11.00 மணி முதல்
1.00 மணி வரை**


இடம்: ஏ-4, டேஜு பிளாசா
2, தெற்கு அவென்யூ, ஸ்ரீநகர் காலனி
சைதாப்பேட்டை, சென்னை - 600 015.
(சைதாப்பேட்டை கோர்ட் அருகில்)

**சகோதரிகள் கலந்துகொள்ளுங்கள்**

### சகோதரரே எங்களுக்காய் **வேண்டிக்கொள்ளுங்கள்!**

- ஒளி எக்காளம் பத்திரிகை, வேத ஆராய்ச்சி கூட்டங்கள், விடுதலை ஊழியங்கள் மற்றும் அனைத்து ஊழியங்களிலும் கிருபை பெருக, பரிசுத்த ஆவியானவரின் வல்லமை, அபிஷேகம் அளவில்லாமல் ஊற்றப்பட...
- அனைத்துக் கூட்டங்களிலும் இயேசு கிறிஸ்துவின் மனதுருக்கம் வெளிப்பட்டு, திரள் கூட்டம் அவரை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொள்ள...
- பிணியாளிகள் குணமாக, ஏராளமான அற்புதங்களினால் கர்த்தருடைய வார்த்தை உறுதிப்பட...
- பிசாசின் வல்லமை கட்டப்பட, அந்தகார சக்திகள் முறியடிக்கப்பட, கட்டுகள் அறுக்கப்பட...
- சகோதரருக்கும், குடும்பத்தினருக்கும் தேவனுடைய பாதுகாப்பும், பரிபூரண ஆரோக்கியமும், தெய்வீக ஞானமும் உண்டாக....
- பொருளாதார தேவைகள் சந்திக்கப்பட...
- கர்த்தருடைய வாக்குத்தத்தங்கள் தேவநாம மகிமைக்காக இவ்வூழியங்களில் பரிபூரணமாய் நிறைவேற...

# குடிமங்கலத்தில்
## வல்லமை பயிற்சி முகாம் - 6வது அணி



ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவினால் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

கடந்த மார்ச் மாதம் 20, 21, 22 தேதிகளில் திருப்பூரிலிருந்து 50 கி.மீ. தொலைவில் குடிமங்கலத்திலுள்ள (உடுமலைக்கு அருகில்) 'தேவனுடைய வீடு' சபையில், பரிசுத்த ஆவியின் வரங்கள் குறித்ததான வல்லமை பயிற்சி முகாம், கர்த்தருடைய பெரிதான கிருபையினால் நடந்தது. சுமார் 70 பேர் கலந்து கொண்டனர். 7 போதகர்கள் கலந்து கொண்டது எனக்கு மிகுந்த சந்தோஷத்தையும், உற்சாகத்தையும் தந்தது. கடுமையான வெயிலையும் தாண்டி கர்த்தருடைய பிள்ளைகள் கலந்து கொண்டது, அவர்களது வாஞ்சையையும், ஆர்வத்தையும் காண்பித்தது.

போதகர் எபிநேசர் எல்லா ஏற்பாடுகளையும் சிறப்பாகச் செய்திருந்தார். போதகர் காலேப் ஜெயக்குமார் (பெத்தேல் மிஷன் சபை, காட்டாத்துறை, கன்னியாகுமரி) தீர்க்கதரிசன வரம் மற்றும் ஆவிகளைப் பகுத்தறியும் வரம் குறித்து தனது அனுபவங்களோடு விவரித்துக் கற்றுக்கொடுத்தார். அது எல்லோருக்கும் மிகுந்த ஆசீர்வாதமாக இருந்தது. சகோதரர் அகஸ்டின் ராஜசேகர் (முதலூர்) முகாமில் கலந்து கொண்டு, வரங்களை எப்படி பாதுகாத்துக் கொள்வது என்பதை விளக்கிச் சொன்னார்.


சபை விசுவாசிகள், போதகருக்கு மிகுந்த உதவியாய் இருந்தார்கள். அது மிகுந்த சந்தோஷத்தைத் தந்தது.

இந்தத் தடவை பரிசுத்த ஆவியின் காற்று தமிழகத்திற்கு மேற்கே (குடிமங்கலம்) வீசியுள்ளது. கர்த்தர், இந்த பிள்ளைகளை எவ்வளவாய் நேசிக்கிறார் என்பதை என்னை எடுத்து கர்த்தர் பயன்படுத்தியதைப் பார்த்துத் தெரிந்து கொண்டேன். மிக எளிமையான முறையில், யதார்த்தமாக, அநேக உதாரணங்களுடன் வரங்களைக் குறித்து கற்றுக்கொடுக்க வைத்தார். தேவனுக்கே மகிமை உண்டாகட்டும்.

கிறிஸ்துவுக்குள் அன்புடன்,

Paulraj Kennedy








இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் **பாவமன்னிப்பு**
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் **சமாதானம்**
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் **நீதிமான்களாக்கப்படுதல்**
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் **கிருபை**
இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் **சுகம்**

■ சகோதரி நிஜா கென்னடி

**இ**ரத்தஞ்சிந்துதலில்லாமல் மன்னிப்பு உண்டாகாது (எபிரெயர் 9:22). நம் தேவன் பரிசுத்தர். பாவத்தை வெறுக்கிறார். நாம் செய்த பாவத்திற்கு தண்டனை உண்டு. பாவத்தின் சம்பளம் மரணம். நாம் செய்த பாவத்திற்கெல்லாம் தண்டனை கிடைத்தால் நாம் உயிரோடு இருக்க முடியாது. பாவத்திலிருந்து நம்மை மீட்க, தேவன் தமது குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை உலகத்திற்கு அனுப்பினார். நமது பாவங்களுக்காக அவரை சிலுவையில் அறைய ஒப்புக்கொடுத்தார். நம்முடைய பாவங்களுக்கான தண்டனையை இயேசு கிறிஸ்து ஏற்றுக்கொண்டார். சிலுவையில் இரத்தத்தை சிந்தினார். நம்முடைய பாவங்களை நீக்குவதற்காக அவர் தமது ஜீவனையே கொடுத்தார்.

மாம்சத்தின் உயிர் இரத்தத்தில் இருக்கிறது; நான் அதை உங்களுக்குப் பலிபீடத்தின்மேல் உங்கள் ஆத்துமாக்களுக்காகப் பாவநிவிர்த்தி செய்யும்படிக்குக் கட்டளையிட்டேன்; ஆத்துமாவுக்காகப் பாவநிவிர்த்தி செய்கிறது இரத்தமே (லேவியராகமம் 17:11). சகல மாம்சத்துக்கும் இரத்தம் உயிராயிருக்கிறது. இரத்தம் ஜீவனுக்குச் சமானம். மனிதன் பாவம் செய்யும்போது, தேவனோடு தனக் குள்ள ஐக்கியத்தை, பரிசுத்தத்தை இழந்து போகிறான். தேவனை விட்டு விலகி, குற்ற உணர்வோடுகூட இருக் கிறான். பழைய ஏற்பாட்டுக் காலத்தில் ஜனங்கள் தங்கள் பாவங்களை நிவிர்த்தி செய்ய விலங்குகளை பலியாக செலுத்தினார்கள். பலிபீடத்தில் செலுத்தும் இரத்தம்தான் ஆத்துமாவை பாவ நிவிர்த்தி செய்யும். பிரதான ஆசாரியன் தன்னுடைய பாவத்திற்காகவும் ஜனங்களின் பாவத்திற்காகவும் வருடத்தில் ஒருநாள் பலி செலுத்தப்பட்ட மிருகத்தின் இரத்தத்துடன், பயத்தோடும், நடுக்கத்தோடும் மகா பரிசுத்த ஸ்தலத்திற்குள் பிரவேசித்தான். ஆனால் இன்றைக்கு இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார் (எபிரெயர் 7:27). பாவமே செய்யாத இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களை போக்குவதற்காக இரத்தத்தை சிந்தினார்.


இன்றைக்கும் இயேசு கிறிஸ்துவை சரியாக அறிந்திராத அநேகர் பாவம் செய்துவிட்டு அதற்கு பரிகாரமாக கோயில்களுக்கும் பல புண்ணிய ஸ்தலங்களுக்கும் சென்று ஸ்நானம் செய்கிறார்கள். ஏழை, எளியவர்களுக்கு உதவி செய்வார்கள். இப்படிச் செய்தால் தங்கள் பாவங்களெல்லாம் போய்விட்டது என்று நம்புகிறார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தமேயன்றி வேறு எந்த விதத்திலும் பாவங்களை கழுவி சுத்திகரிக்க முடியாது. இரத்தஞ்சிந்து தலில்லாமல் பாவமன்னிப்பு இல்லை. இயேசு கிறிஸ்துவின் இரத்தமே இருதயத்திலுள்ள பாவங்களை கழுவி

**இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தம்மையே ஜீவ பலியாக ஒப்புக்கொடுத்தார். அவர் பிரதான ஆசாரியர்களைப்போல முன்பு சொந்த பாவங்களுக்காகவும், பின்பு ஜனங்களுடைய பாவங்களுக்காகவும் நாடோறும் பலியிட வேண்டுவதில்லை; ஏனெனில் தம்மைத்தாமே பலியிட்டதினாலே இதை ஒரே தரம் செய்து முடித்தார்.**

சுத்திகரிக்கிறது. கிறிஸ்தவர்களுக்கு மட்டுமல்ல, உலகமெங்குமுள்ள ஜனங்களின் பாவங்களை மன்னிப்பதற்கு இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தைச் சிந்தினார். யோவான் ஸ்நானகன் இயேசு கிறிஸ்துவைப் பார்த்து இப்படியாகச் சொன்னார்: இதோ, உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி (யோவான் 1:29).

சிலர் பாவம் செய்யாமல் உண்மையாக இருப்பார்கள். நற்செயல்கள் செய்வார்கள். தங்களுக்கு தாங்களே நீதிமான்களாயிருப்பார்கள். சுயநீதியை உடையவர்களாய் இருப்பார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட்டாலொழிய எந்த மனிதனும் நீதிமானாக மாற முடியாது. மனிதன் பிறக்கும்போதே பாவத்தோடேதான் பிறக்கிறான். முதல் மனிதன் ஆதாம் மூலமாக உலக மக்கள் முழுவதற்கும் பாவம் பரவியது.

இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்மை பாவத்திலிருந்து விடுவிக்கிறது. நம் பாவங்களை நீக்க இயேசு கிறிஸ்து இரத்தத்தை சிந்தி, தம் ஜீவனைக் கொடுத்தார். பாவத்தின் சம்பளம் மரணம். பாவம் செய்கிற ஆத்துமா சாகும். பாவம் செய்யும்போது, ஆத்துமா கறைப்படுத்தப்படுகிறது. ஆவிக்குரிய மரணம் அடைகிறோம். நாம் பாவ மன்னிப்பை பெற்றுக்கொண்டு, அவருடைய இரத்தத்தால் கழுவி சுத்திகரிக்கப்படும்போது, ஆத்தும இரட்சிப்பை பெற்றுக்கொள்கிறோம். ஆவிக்குரிய மரணத்திலிருந்து விடுவிக்கப்படுகிறோம். தேவனுடைய கட்டளையை மீறும்போது, பாவம் செய்கிறோம். பாவத்தினால்



**பலி பீடத்தில் அவரையே ஜீவ பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அதனால்தான் நாம் ஜீவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவம் செய்யும்போது, குற்ற மனசாட்சியோடுகூட வாழ்ந்து கொண்டிருப்போம். பாவங்கள் கழுவி சுத்திகரிக்கப்படும்போது, குற்றமற்ற மனசாட்சியை உடையவர்களாக மாறுகிறோம்.**


வரும் தண்டனையை அவர் தம்முடைய ஜீவனைக் கொடுத்து ஏற்றுக் கொண்டார். பலி பீடத்தில் அவரையே ஜீவ பலியாக சிலுவையில் ஒப்புக்கொடுத்தார். அதனால்தான் நாம் ஜீவனோடு வாழ்ந்து கொண்டிருக்கிறோம். பாவம் செய்யும்போது, குற்ற மனசாட்சியோடுகூட வாழ்ந்து கொண்டிருப்போம். பாவங்கள் கழுவி சுத்திகரிக்கப்படும்போது, குற்றமற்ற மனசாட்சியை உடையவர்களாக மாறுகிறோம். இயேசு கிறிஸ்து நம் பாவங்களுக்காக சிலுவையில் மரித்து அடக்கம் பண்ணப்பட்டு மூன்றாம் நாள் உயிர்த் தெழுந்தார். பாவத்திலிருந்து, மரணத்திலிருந்து வெற்றி சிறந்தார். பாவத்தை, மரணத்தை அதிகாரபூர்வமாக வென்றார்.


## இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் பாவமன்னிப்பு

(குமாரனாகிய) அவருக்குள் அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது (கொலோசெயர் 1:14). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் பாவத்தை மன்னிக்கிறது. பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்கிறது. தேவனது இரக்கத்தால் நமது பாவங்கள் மன்னிக்கப்பட்டன. இயேசு கிறிஸ்துவின் இரத்தத் தால் நாம் விடுதலை பெற்றோம். அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபேசியர் 1:7). நாம் செய்த பாவங்களுக்காக உண்மையான இருதயத்தோடு கர்த்தரிடம் மன்னிப்பு கேட்கும் போது, இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் மன்னிப்பை பெற்றுக்கொள்கிறோம். பாவத்தின் அடிமைத்தனத்திலிருந்து விடுவிக்க, இயேசு கிறிஸ்து தமது விலையேறப்பெற்ற இரத்தத்தினால் நம்மை விலை கொடுத்து மீட்டுக் கொண்டார். குற்றமில்லாத மாசற்ற ஆட்டுக்குட்டியாகிய கிறிஸ்து வின் விலையேறப்பெற்ற இரத்தத்தினாலே மீட்கப் பட்டீர்களென்று அறிந்திருக்கிறீர்களே (1 பேதுரு 1:19). அவருடைய மரணத்தின் மூலம் நம்மை அடிமைப்படுத்தியிருந்த பாவங்களிலிருந்து (பெருமை, கோபம், பொறாமை, இச்சை, பேராசை, கசப்பு, மன்னிக்க முடியாத தன்மை) விடுதலை பெற்றோம். பாவ சுபாவங்களை மேற்கொள்ள இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் வல்லமை உண்டு. சாந்தம், மன்னிக்கும் சுபாவம், அன்பு, தூய்மை, தயாள குணம், இச்சையடக்கம் ஆகிய சுபாவங்களை நமக்கு கொடுக்கிறது.

நம்மை அடிமைப்படுத்தி வைத்திருந்த பாவத் தின் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எடுப்பதற்காக இயேசு கிறிஸ்து தமது இரத்தத்தை சிந்தினார். விலை மதிக்க முடியாத தமது இரத்தத்தால் நம்மை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார். நாம் செய்த பாவங்களுக்காக அவர் சிலுவையில் பாடுகள் பட்டார், அடிக்கப்பட்டார், காயப்பட்டார், வேதனை களை சகித்தார். நாம் செய்த பாவத்திலிருந்தும், பாவத்தின் தண்டனையிலிருந்தும் விடுவிக்கப்பட பிதா தம்முடைய சொந்த குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை இந்த உலகத்திற்கு அனுப்பி சிலுவை யில் பலியாக ஒப்புக்கொடுத்தார்.

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப் பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார் (ஏசாயா 53:5). நாம் பாவம் செய்து, தேவனுக்கு முன்பாக குற்றமுள்ளவர் களாய் இருப்பதால், இயேசு கிறிஸ்து சிலுவையில் அறையப்பட்டார். நமக்கு வரவேண்டிய தண்ட னைக்கு பரிகாரமாகவும், நமது பாவங்களின் தண்டனையை ஏற்றுக்கொண்டும் அவர் மரித்தார். நாமெல்லாரும் ஆடுகளைப் போல வழிதப்பித் திரிந்து, அவனவன் தன் தன் வழியிலே போனோம். கர்த்தரோ நம்மெல்லாருடைய அக்கிரமத்தையும் அவர்மேல் விழப்பண்ணினார் (ஏசாயா 53:6). நாம் ஒவ்வொருவரும் கர்த்தரு டைய கற்பனைகளை விட்டுவிலகி நம் சொந்த பாவ வழியில் நடந்தோம். ஆகையால் என்ன சொல்லு வோம்? கிருபை பெருகும்படிக்குப் பாவத்திலே நிலை நிற்கலாம் என்று சொல்லுவோமா? கூடாதே (ரோமர் 6:1). தேவனுடைய கிருபை மிகுதியாய் கிடைக்கும் என்று நினைத்து பாவத்திலேயே வாழக்






கூடாது. இரட்சிக்கப்படுமுன் பாவ இச்சைகளால் ஆளுகை செய்யப்பட்டு, பாவத்தின் அடிமைத் தனத்தில் இருந்தோம். இரட்சிக்கப்பட்ட பின்பு பழைய பாவ வாழ்க்கை வாழும்படி சரீரத்திற்கு அனுமதி கொடுத்துவிடக் கூடாது. பழைய வாழ்க் கையை விட்டுவிட வேண்டும். ஒருவருக்கொருவர் பொய் சொல்லாதிருங்கள்; பழைய மனுஷனையும் அவன் செய்கைகளையும் களைந்துபோட்டு, தன்னைச் சிருஷ்டித்தவருடைய சாயலுக்கொப்பாய் பூரண அறிவடையும்படி புதிதாக்கப்பட்ட புதிய மனுஷனைத் தரித்துக் கொண்டிருக்கிறீர்களே (கொலோசெயர் 3:9,10). ஒருவன் கிறிஸ்துவுக் குள்ளிருந்தால் புதுச்சிருஷ்டியாயிருக்கிறான்; பழையவைகள் யாவும் ஒழிந்து போயின எல்லாம் புதிதாயின (2 கொரிந்தியர் 5:17).

இது பாவ மன்னிப்புண்டாகும்படி அநேகருக் காகச் சிந்தப்படுகிற புது உடன்படிக்கைக்குரிய என்னுடைய இரத்தமாயிருக்கிறது (மத்தேயு 26:28). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் அநேகரு டைய பாவங்களை கழுவி சுத்திகரிக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் தேவனுக்கும், ஜனங்களுக்குமான புதிய உடன்படிக்கை துவங்கு கிறது. பாவ மன்னிப்பை பெற்றுக்கொள்ளும்போது, தேவனோடு நமக்குள்ள உறவு புதுப்பிக்கப்படு கிறது. மன்னிப்பை பெற்றுக்கொள்வதற்கு மனந் திரும்புதலும், விசுவாசமும், பாவங்களை அறிக் கையிடுதலும் அவசியம்.

தன் பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடைய மாட்டான்; அவைகளை அறிக்கை செய்து விட்டு விடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதிமொழிகள் 28:13). தேவனுக்கு மறைவானது ஒன்றுமில்லை.



நாம் செய்த பாவத்தை ஒத்துக்கொண்டு, அறிக்கை செய்து அதை விட்டுவிட தீர்மானிக்க வேண்டும். பாவம் செய்வதை நிறுத்த வேண்டும். நமக்குப் பாவமில்லையென்போ மானால், நம்மை நாமே வஞ்சிக்கிற வர்களாயிருப்போம், சத்தியம் நமக் குள் இராது. நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத் தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்ப தற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:8,9).

மனுஷ குமாரனும் ஊழியம் கொள்ளும்படி வராமல், ஊழியஞ் செய்யவும், அநேகரை மீட்கும் பொருளாகத் தம்முடைய ஜீவனைக் கொடுக்கவும் வந்தார் (மத்தேயு 20:28). சிறிய பாவமோ, பெரிய பாவமோ, எப்பேர்ப்பட்ட கொடிய பாவத்தையும் இயேசு கிறிஸ்துவின் இரத்தம் கழுவி பரிசுத்தப்படுத்துகிறது. பாவத்தில் அடிமைப்பட்டிருந்த உலக மக்கள் அனைவரின் விடுதலைக்காக இயேசு கிறிஸ்து மரித்தார். பாவத் திலிருந்து, மரணத்திலிருந்து, ஆக் கினை தீர்ப்பிலிருந்து விடுவிக்க இரத் தத்தை சிந்தினார். இயேசு கிறிஸ்து வின் இரத்தத்தால் கழுவப்பட்டவர் களே பரலோகம் செல்ல முடியும் (வெளி 7:14). இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து மனந்திரும்புகிற யாவரு டைய பாவங்களையும் இயேசு கிறிஸ் துவின் இரத்தம் மன்னிக்கிறது.

அவர் நெருக்கப்பட்டும், ஒடுக்கப் பட்டும் இருந்தார். ஆனாலும் தம்மு டைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படும்படி கொண்டுபோகப் படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போல வும், தன்னை மயிர் கத்தரிக்கிறவ னுக்கு முன்பாகச் சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும், அவர் தம்மு டைய வாயைத் திறவாதிருந்தார் (ஏசாயா 53:7). அவர் ஒரு குற்றமும்

**நாம் செய்த பாவத்தை ஒத்துக்கொண்டு, அறிக்கை செய்து அதை விட்டுவிட தீர்மானிக்க வேண்டும். பாவம் செய்வதை நிறுத்த வேண்டும். நமக்குப் பாவமில்லை யென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது. நம்முடைய பாவங்களை நமக்கு மன்னித்து, எல்லா அநியாயத்தையும் நீக்கி, நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார் (1 யோவான் 1:8,9).**

செய்யவில்லை. அப்படி யிருந்தும் பிரதான ஆசாரியரும், மூப்பரும் அவர்மேல் குற்றஞ் சாட்டினார்கள். இயேசு கிறிஸ்து சிலுவையில் ஜீவ பலியாக தம்மை மரிக்க ஒப்புக்கொடுத்ததால், உலகத்திலுள்ள எல்லா ஜனங்களின் பாவக்கறைகள் நீக்கப்பட்டது. ஒவ்வொரு தனிப் பட்ட மனிதனின் பாவத்தையும் இயேசு கிறிஸ்து மன்னித்து, தமது இரத்தத்தை சிந்தி, விலைகொடுத்து வாங்கியிருக்கிறார். நாம் செய்த பாவத்தை உணர்ந்து, அவரிடம் மன்னிப்பை பெற்றுக்கொள்ள வேண்டும். பாவ மன்னிப்பை பெற்றுக் கொள்ளாதவர்கள் தாங்கள் செய்த பாவத்திற்கான தண்ட னையை அடைவார்கள்.

என்னிடத்தில் பாவம் உண்டென்று யார் என்னை குற்றப் படுத்தக்கூடும் என்று இயேசு கிறிஸ்து கூறுகிறார். பரிசுத்தமாக வாழ்ந்தார். கண்ணின் பார்வையில், சிந்தனையில், வார்த்தை யில், செயல்களில், நடத்தையில் பரிசுத்தமாய் இருப்போம். சாத்தான் எத்தனை விதமான பாவசோதனைகளை கொண்டு வந்தாலும் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையினால் அவற்றை மேற்கொள்ளுவோம்.

## இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் நீதிமான்களாக்கப்படுதல்

நாம் அவருடைய இரத்தத்தினாலே நீதிமான்களாக்கப் பட்டிருக்க, கோபாக்கினைக்கு நீங்கலாக அவராலே நாம் இரட் சிக்கப்படுவது அதிக நிச்சயமாமே (ரோமர் 5:9). இயேசு கிறிஸ்து வின் இரத்தத்தின் மூலம் நாம் நீதிமான்களாக்கப்படுகிறோம். நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்துடன் நாம் செய்த பாவத்தைக் குறித்து மனஸ்தாபப்பட்டு மனந் திரும்பி அதை அறிக்கை செய்தால், அந்த பாவத்தை அகற்றி நம்மை நீதிமான்களாக்குகிறார். இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக இரத்தம் சிந்தி தன்னையே பலியாக கொடுத்திருக் கிறார் என்று விசுவாசித்து பாவ அறிக்கை செய்து மனந்திரும்ப வேண்டும். கிறிஸ்து இயேசுவினு டைய இரத்தத்தைப் பற்றும் விசுவாசத்தினாலே பலிக்கும் கிருபாதார பலியாக அவரையே ஏற்படுத் தினார் (ரோமர் 3:26). இயேசு கிறிஸ்துவை விசுவா சிக்கிற யாவரையும் அவர் நீதிமான்களாக்குகிறார்.

முன்னே தூரமாயிருந்த நீங்கள் இப்பொழுது கிறிஸ்து இயேசுவுக்குள் கிறிஸ்துவின் இரத்தத் தினாலே சமீபமானீர்கள் (எபேசியர் 2:13). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் தேவனிடம் நம்மை நெருங் கிச் சேரப்பண்ணும். தகுதியில்லாத நம்மைத் தகுதி யுள்ளவர்களாக மாற்றும். இயேசு கிறிஸ்துவின் இரத்தத்திற்கு வல்லமை உண்டு. நாம் தேவனை அறியாதவர்களாய், அசுத்தமுள்ளவர்களாய், நம் பிக்கையற்றவர்களாய், கைவிடப்பட்டவர்களாய், ஒதுக்கப்பட்டவர்களாய் இருந்தோம். இப்போது தேவன் நம்மேல் வைத்த அன்பால் இரட்சிப்பை பெற்றுக்கொண்டோம். இயேசு கிறிஸ்துவின் இரத் தத்தின் மூலம் பாவங்கள் கழுவப்படும்போது, தேவனுக்கு மிகவும் அருகாமையில் கொண்டு வரப்படுகிறோம். பரிசுத்த ஆவியானவரின் அபி ஷேகத்தை பெற்றுக்கொள்ளும்போது, அவருடைய பிரசன்னத்தினால் நிரப்பப்படுகிறோம். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் நம்முடைய வார்த்தைகள், எண்ணங்கள், கிரியைகள், கற்பனைகள் முதலி யவை உட்பட நம் ஜீவியத்தின் ஒவ்வொரு பகுதியி லும், எல்லா வேளையிலும் தேவ சமூகத்தினால் வழிநடத்தப்படவும், ஆளுகை செய்யப்படவும் உதவி செய்யும்.

கிறிஸ்துவினுடைய இரத்தம் ஜீவனுள்ள தேவனுக்கு ஊழியஞ்செய்வதற்கு உங்கள் மனச் சாட்சியைச் செத்த கிரியைகளறச் சுத்திகரிப்பது எவ் வளவு நிச்சயம் (எபிரெயர் 9:14). நாம் குற்றமற்ற மனசாட்சியை உடையவர்களாக, நீதிமான்களாக இருக்க வேண்டுமானால் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தால் கழுவப்பட வேண்டும். இரத்தம் மன சாட்சியை பரிசுத்தப்படுத்துகிறது. தேவனோடு நெருங்கிய உறவு கொள்ள வேண்டுமானால் மன சாட்சி பரிபூரணமாக பரிசுத்தமாக்கப்பட்டிருக்க வேண்டும். ஏனெனில் நான் அவர்கள் அநியாயங் களைக் கிருபையாய் மன்னித்து, அவர்கள் பாவங் களையும், அக்கிரமங்களையும் இனி நினையா மலிருப்பேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் (எபிரெயர் 8:12). பிரதான ஆசாரியர் ஆண்டு தோறும் பலி செலுத்தினார்கள். ஆனால் கிறிஸ்துவோ ஒரே தடவையாக நமக்காக பலியா னார். பிரதான ஆசாரியர் விலங்குகளின் இரத் தத்தை படைத்தார். கிறிஸ்துவோ சொந்த இரத் தத்தை படைத்தார். பிரதான ஆசாரியரின் பலிகள் சரீர சுத்திகரிப்பை உண்டாக்கும். கிறிஸ்துவின் பலியோ மனசாட்சியை சுத்திகரிக்கிறது. நம் வாழ்க் கையை, நம் இருதயத்தை முற்றிலுமாக மாற்றி பரிசுத்தப்படுகிறது.

மதச் சடங்குகளோ, கற்பனைகளோ நம் இருதயத்தை சுத்தப்படுத்த முடியாது. இயேசு கிறிஸ்துவின் இரத்தம் மட்டுமே இருதயத்தை சுத்தப் படுத்த முடியும். நாம் பாவம் செய்து, குற்ற மன சாட்சியோடுகூட, பாவபாரங்களோடு இருக்கும் போது, தேவனுக்கு பிரியமாய் இருக்க முடியாது.

இயேசு கிறிஸ்து நம்முடைய பாவங்களுக்காக தம்மை பலியாக கொடுத்தார். அவரை நோக்கிப் பார்க்கும்போது, குற்ற உணர்வோடு இருக்கும் மன சாட்சியை குணப்படுத்துவார். குற்ற உணர்வி லிருந்து விடுவித்து, மன அமைதியை தருவார். இயேசுவின் இரத்தம் பாவத்தின் அடிமைத்தனத் திலிருந்து, சாபத்திலிருந்து, மரணத்திலிருந்து நம்மை விடுவிக்கிறது. சாத்தானின் வல்லமையி லிருந்து விடுவிக்கப்படுவதினால், இயேசு கிறிஸ்து வின் பிள்ளைகளாக மாறி விடுகிறோம். பிசாசுகள் நம்மைப் பார்த்து நடுங்கும்.

தேவனுடைய குமாரனைக் காலின் கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப் பாருங்கள் (எபிரெயர் 10:29). சத்தியத் தைப் பற்றிய அறிவைப் பெற்றுக்கொண்டபின் துணிகரமாகப் பாவங்களைச் செய்து கொண்டிருந் தால் (எபிரெயர் 10:26) நாம் இயேசு கிறிஸ்துவை காலின் கீழ்போட்டு மிதிக்கிறவர்களாயிருப்போம். அவருடைய வாழ்க்கையையும், மரணத்தையும் வெறுக்கிறவர்களாயிருப்போம். பரிசுத்த இரத் தத்தை மிதிக்கிறவர்களாக இருப்போம். இயேசு சிந்திய இரத்தம்தான் நம்மை பரிசுத்தமாக்கிய உடன்படிக்கையின் இரத்தமாகும்.

இரட்சிப்பை பெற்றுக்கொண்டவர்கள், அவரு டைய போதனைகளில் சிலவற்றை புறக்கணித்து, பின்வாங்கி போகிறார்கள். கிறிஸ்துவில் நிலைத் திருக்காமல், மீண்டும் பாவத்திலும், ஒழுக்கக் கேடான கிரியைகளிலும் அடிமையாகி விடுகிறார் கள். நாம் கீழ்ப்படிதலிலும், விசுவாசத்திலும் உறுதி யாய் தரித்திருக்க வேண்டும்.

தங்கள் ஆலோசனையைக் கர்த்தருக்கு மறைக்கும்படிக்கு மறைவிடங்களில் ஒளித்து தங்கள் கிரியைகளை அந்தகாரத்தில் நடப்பித்து:



நம்மைக் காண்கிறவர் யார்? நம்மை அறிகிறவர் யார்? என்கிறவர்களுக்கு ஐயோ! (ஏசாயா 29:15). கர்த்தருக்கு மறைவானது ஒன்றுமில்லை. இவர்கள் தேவனிடம் அன்பு செலுத்தாமல், அவரது நீதியைப் பின்பற்றாமல் தங்களது இச்சைகளை நிறைவேற்ற பாவ சிற்றின்பங்களையும், உலக ஆசாபாசங்களையும் நாடிச் செல்கின்றனர் (மாற்கு 7:6,8). இவர்கள் சாத்தானால் வஞ்சிக்கப்பட்டு ஆவிக்குரிய குருட்டாட்டத்தில் இருப்பவர்கள். இவர்கள் செய்யும் கெட்ட செயல்களை யாரும் பார்க்க முடியாது. தாங்கள் யார் என்று யாருக்கும் தெரியாது என்று கூறுகிறார்கள். வெளியே நீதிமான்கள்போல காணப்படுவார்கள். உள்ளமோ மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருக்கும் (மத்தேயு 23:28).

பாவத்தின் வஞ்சகத்தின் மூலம் தங்கள் வாழ்க்கையில் பாவத்துக்கு முதலிடம் கொடுத்து விடுகிறார்கள். அநியாயக்காரர்கள் தேவனுடைய இராஜ்யத்தை சுதந்தரிப்பதில்லை (1 கொரிந்தியர் 6:9-10). அவர்கள் நீதியை நேசிப்பதுமில்லை. அக்கிரமத்தை வெறுப்பதுமில்லை (எபிரெயர் 1:9). அவர்கள் தங்கள் இருதய கடினத்தினிமித்தமும், தேவனுடைய வழிகளைவிட்டு விலகுவதினிமித்தமும் அவர்கள் எச்சரிக்கையை கேளாமற் போகிறார்கள். பரிசுத்த ஆவியை கண்டனம் செய்கிறார்கள் (எபேசியர் 4:30). தங்கள் இருதயங்களை கடினப்படுத்தி, துணிகரமாகவும், தொடர்ச்சியாகவும், ஆவியின் குரலை அசட்டை செய்து, தொடர்ந்து பாவங்களை செய்கிறார்கள். உங்கள் இருதயங்களை கடினப்படுத்தாதிருங்கள் (எபிரெயர் 3:8). எந்த ஆத்துமாவும் அழிந்து போவது தேவனுக்கு பிரியமில்லை. தங்கள் பாவங்களை அறிக்கையிட்டு மனந்திரும்புகிறவர்கள் ஏற்றுக்கொள்ளப்படுவார்கள். இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எப்பேர்ப்பட்ட பாவத்தையும் கழுவி சுத்திகரிக்கும். அவர்களை நீதிமானாக மாற்றும்.

## இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சமாதானம்

அவர் சிலுவையில் சிந்திய இரத்தத்தினாலே சமாதானத்தை உண்டாக்கினார் (கொலோசெயர் 1:20). இயேசு கிறிஸ்துவே சமாதான காரணர், சமாதான பிரபு. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம் பாவங்கள் கழுவப்பட்டிருப்பதினால் தேவ சமாதானத்தை எப்பொழுதும் அனுபவிக்கலாம். இந்த சமாதானத்தை உலகம் கொடுக்க முடியாது. தேவனை அறியாதவர்கள், பேர், புகழ், பணம், நண்பர்கள் தங்களுக்கு சமாதானத்தை கொடுக்க முடியும் என்று நினைக்கிறார்கள். பணம், ஆஸ்திகள் சேர்த்து வைத்தால் சமாதானமாக வழலாம் என்று நினைத்து தங்கள் நாட்களை பணம் சம்பாதிப்பதிலேயே கழித்து சலிப்பும், ஏமாற்றமும் அடைகிறார்கள். ஐசுவரியவான்கள் தங்கள் பணத்தை எப்படி பாதுகாப்பது என்பதை குறித்தே யோசித்து பயந்து, சமாதானத்தை இழந்து காணப்படுவார்கள். நாம் இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் முழுமையாக கழுவப்பட்டிருப்போமென்றால் எப்போதுமே பூரணமான மன சமாதானத்தை உடையவர்களாக இருப்போம். நம் மன சமாதானத்தை யாரும் குலைக்க முடியாது.


இயேசு கிறிஸ்துவின் இரத்தம் எல்லா ஜனங்களின் பாவங்களையும் கழுவி சுத்தப்படுத்தி, அவர்களை கர்த்தரண்டை வர வைக்கிறது. நம்மை உண்டாக்கினவரோடுகூட சரியான உறவு வைத்துக் கொள்ள செய்கிறது. இயேசு கிறிஸ்துவை விசுவாசித்து, அவருடைய இரத்தத்தால் கழுவப்படுகிற எல்லாரும் அழிவுக்கு விலக்கி பாதுகாக்கப்படுகிறார்கள். குற்றமற்றவர்களாக, பரிசுத்தமாகி விடுகிறார்கள். கர்த்தரோடுகூட சமாதானமாக இருக்கிறார்கள். கர்த்தரை ஏற்றுக்கொண்டு அவரோடு ஒப்புரவாகி விடுகிறார்கள்.

மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு, நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்; நாமோ அவர் தேவனால் அடிபட்டு, வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு, நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:4,5). நாம் செய்த பாவங்களுக்குத் தண்டனையாக இயேசு கிறிஸ்து பாடுகளை அடைந்தார். நமக்கு வரும் தண்டனையை அவர் ஏற்றுக் கொண்டார். பாவத்தின் பரிகாரமான இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைப் பார்த்து, தேவன் மனிதனோடு சமாதானமாக நட்புறவானார். நம் பாவங்களுக்காக மரணத்தை ஏற்றுக்கொண்டார்; இரத்தத்தை சிந்தினார் என்று விசுவாசிக்கும்போது தேவனோடு சமாதானமாயிருப்போம். நமக்கும் நம்மை படைத்த தேவனுக்கும் இடையே உள்ள உறவில் தூரத்தில் இருக்கிறீர்களா? அப்படியிருந்தால், இயேசு கிறிஸ்து மூலமாக தேவனிடத்தில் சேருவோம்.

அன்றியும் நாம் பெலனற்றவர்களாயிருக்கும் போதே, குறித்த காலத்தில் கிறிஸ்து அக்கிரமக்காரருக்காக மரித்தார் (ரோமர் 5:6). ஒரு காலத்தில் நாம் தேவனைவிட்டு பிரிந்திருந்தோம். அந்நியராயிருந்தோம். நம் மனதின் சிந்தனைகளும், செயல்களும் தேவனுக்கு எதிராய் இருந்தது. நேர்மையற்ற தவறான சிந்தனைகள் பாவத்துக்கு நேராக இழுத்து செல்கிறது. ஒழுக்கக்கேடாக நடக்க வைத்தது. இச்சிந்தனைகள் கர்த்தரைப் பற்றிய நினைவுகளை அழித்து விடுகிறது. இப்பொழுதோ நாம் கிறிஸ்துவைப் பற்றும் விசுவாசத்தில் உறுதியாய் நிலைத்திருக்க வேண்டும். நம் ஆத்துமாவை அழிக்கக்கூடிய பழைய பாவ வாழ்க்கைக்கு திரும்பி விடக் கூடாது. தேவனோடு இணங்கி வாழவில்லை என்றால் தேவனை எதிர்க்கிறவர்களாக இருப்போம். சமாதானத்தை இழந்து காணப்படுவோம். நாம் பரிசுத்தமாக வாழும்போது, சமாதானத்தோடு இருப்போம்.

## இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் மூலம் கிருபை

அவருடைய கிருபையின் ஐசுவரியத்தின்படியே இவருடைய இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பு இவருக்குள் நமக்கு உண்டாயிருக்கிறது (எபேசியர் 1:7). இந்த உலகத்தில் நாம் வாழ்வது கர்த்தருடைய பெரிதான கிருபையினாலே. இது பாவம் நிறைந்த உலகம். பாவத்தின் சம்பளம் மரணம். இது தேவன் நியமித்த நீதி. பாவம் செய்கிற எந்த ஆத்துமாவும் சாகும். அப்படி பாவம் செய்கிறவன் சிலுவையில் அடிக்கப்பட வேண்டும். இந்த பாவத்தின் பிராயசித்தம், அவனது பாவங்கள் இரத்தத்தால் கழுவப்பட வேண்டும். ஒருவன் பாவம் செய்து, தண்டனை பெறுவதற்காக சிலுவையை நோக்கிச் செல்லும்போது, அவனது மரணத்தைக் குறித்து நினைத்து, வருந்தும்போது மனந்திரும்புகிறான். சிலுவையண்டை அவன் செல்லும்போது, அங்கே இயேசு கிறிஸ்து சிலுவையில் தொங்கிக் கொண்டிருக்கும் காட்சியை மனக்கண்களினால் பார்க்கிறான். உன்னுடைய பாவங்களுக்காக நான் மரித்து விட்டேன், நீ மரிக்க தேவையில்லை. உனக்காக நான் இரத்தம் சிந்தி விட்டேன்; நீ இரத்தம் சிந்த வேண்டியதில்லை என்று இயேசு கிறிஸ்து அவனிடம் சொல்வதைக் கேட்கிறான். தான் செய்த பாவங்களை அறிக்கையிட்டு மன்னிப்பு கேட்கிறான். அவரது பரிசுத்த இரத்தத்தால் அவனது பாவங்கள் கழுவப்படுகிறது. அவன் பரிசுத்தமாகிறான். பாவியாக மரணத்தை நோக்கிச் சென்றவன், புது மனிதனாக, புதிய வாழ்வை பெற்றவனாக திரும்பி நீதிமானாக வருகிறான். இனி அவன் மரிக்கும்போது, நிச்சயமாக பரலோகம் செல்வான் என்ற நிச்சயத்தோடு வாழ்கிறான்.

ஜெப தேவைக்கும் தேவ ஆலோசனைக்கும்

வாழ்வில் போராட்டமா?, தேவனுடைய சத்தத்தை கேட்க முடியவில்லையா?, எதிர்காலத்தைக் குறித்த பயமா?, உங்கள் ஜெப தேவைக்கும், தேவ ஆலோசனைக்கும் தயக்கமின்றி தொடர்பு கொள்ளவும். சகோதரரை நேரில் சந்திக்க விரும்புகிறவர்கள் கீழ்கண்ட தொலைபேசி எண்களில் உறுதிப்படுத்திக் கொண்டு வரவும்.

HELP LINE
+91-44-2235 3500
+91-9940667881
nijakennedy@yahoo.com
WWW.KENNEDYMINISTRIES.ORG

## இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் சுகம்

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தில் சுகமளிக்கும் வல்லமை உள்ளது. சில வியாதிகள் பாவத்தினால் வருகிறது. அவர் உன் அக்கிரமங்களையெல்லாம் மன்னித்து, உன் நோய்களையெல்லாம் குணமாக்கி (சங்கீதம் 103:3). இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம் பாவங்களை கழுவி சுத்திகரிக்கக் கூடுமானால், நம் சரீரத்திலுள்ள வியாதிகளையும் சுகமாக்க வல்லமையுள்ளதாயிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் கழுவப்பட்ட தேவ பிள்ளைகளுக்கு வியாதிகளோ, கொள்ளை நோய்களோ வராமல் விலக்கி பாதுகாப்பார். பழைய ஏற்பாட்டு காலத்திலே, பஸ்கா ஆட்டுக்குட்டியின் இரத்தம் தெளிக்கப்பட்ட வீடுகள் வாதைக்கு விலக்கி காக்கப்பட்டன. இந்த இரத்தத்தை நான் கண்டு, உங்களைக் கடந்துபோவேன்... அழிக்கும் வாதை உங்களுக்குள்ளே வராதிருக்கும் (யாத்திராகமம் 12:13). புதிய ஏற்பாட்டு காலத்தில் இயேசு கிறிஸ்துவே நமக்காக அடிக்கப்பட்டார். நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார்; நமக்கு சமாதானத்தை உண்டும்பண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது; அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசாயா 53:5).

பாவம் செய்யும்போது, நம் வாழ்கையில் பிசாசு நுழைவதற்கு இடமளிக்கிறோம். பின் வியாதியின் மூலமாக பிசாசு சிறைப்படுத்துகிறான். இயேசுவின் இரத்தத்தால், நம் பாவங்கள் கழுவி சுத்திகரிக்கப்படும்போது, பிசாசு கிரியை செய்ய முடியாது. வியாதியை கொண்டுவர பிசாசினால் முடியாது.

**இயேசு கிறிஸ்துவே சமாதான காரணர், சமாதான பிரபு. இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தினால் நம் பாவங்கள் கழுவப்பட்டிருப்பதினால் தேவ சமாதானத்தை எப்பொழுதும் அனுபவிக்கலாம்.**

இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் வாழ்ந்தபோது, வியாதியை குணமாக்கும் முன்பாக பாவங்களை மன்னித்தார்.

இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தின் வல்லமையால் சரீரத்திலுள்ள பலவீனங்கள் மாறி சுகம் உண்டாகும். நோயிலிருந்து விடுதலை பெற்றுக் கொள்ளலாம். நாம் பாவங்களுக்குச் செத்து, நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்கு, அவர்தாமே தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார். அவருடைய தழும்புகளால் குணமானீர்கள் (1 பேதுரு 2:24). நாம் பாவத்தில் வாழ்வதை நிறுத்தி உண்மையாய் வாழ்வதற்காக தம் சரீரத்தில் நம்முடைய பாவங்களை சுமந்தார். இயேசு கிறிஸ்துவின் தழும்புகளால் நமக்கு சுகம் கிடைக்கும். இதை விசுவாசித்து சுகத்தை பெற்றுக் கொள்வோம். சாத்தான் வியாதியை கொண்டு வரும்போது, அவர் தமது இரத்தத்தை சிந்தி நம்மை விலை கொடுத்து வாங்கியிருக்கிறார், சாத்தானுக்கு நம்மேல் எந்த அதிகாரமும் கிடையாது என்று விசுவாசித்து சுகத்தை பெற்றுக்கொள்வோம். ■



# குடிமங்கலத்தில் நடைபெற்ற வல்லமை பயிற்சி முகாம்





# இயேசு பேசுவார்...

சகோ. பால்ராஜ் கென்னடி

**ஒருவன்,** தெற்கேயிருந்து வடக்கு நோக்கி போய்க் கொண்டிருக்கிறான். மற்றொருவன், வடக்கிலிருந்து தெற்கு நோக்கி போய்க் கொண்டிருக்கின்றான். இரண்டு பேரும் காரணமில்லாமல், நோக்கமில்லாமல் ஓடவில்லை. இரண்டு பேரும் தங்களுடைய வாழ்க்கையை வாழ்வதற்காக ஓடிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒருவனுக்கு, ஒரு நாளின் வாழ்க்கை அதிகாலமே இருட்டோடே ஆரம்பிக்கின்றது. மற்றொருவனோ, வெயில் அருணோதயம் போல் தோன்றி, உச்சி வெயிலாய் மாறிய பிறகும்கூட படுக்கையில் நெளிந்து கொண்டிருக்கின்றான்.

ஒருவன், அளவிற்கு அதிகமாய் காசு இருப்பதால், அநாவசியமாய் செலவழிக்கின்றான். மற்றொருவனோ, பிச்சை எடுத்துக் கொண்டிருக்கின்றான்.

நாலு தலைமுறைகளுக்கு சம்பாதித்து வைத்த பிறகும், இன்னும் சம்பாதிப்பதற்காக பிரயாசப்படுகிறான். தன்னுடைய சரீரம், திறமை, தாலந்து, நேரம், அறிவு, அனுபவம், மனித உறவு எல்லாவற்றையும் முதலீடு செய்கிறான். இவ்வளவு பாடுபட்டு சம்பாதிப்பதை செலவழிக்க ஆயிரம் தடவை யோசிக்கிறான் எப்படி செலவழிக்காமல் இருக்கலாமென்று.

வசதிக்காக நல்லதொரு வாகனத்தை ஒருவன் வாங்கின காலம் போய், என்னிடமிருப்பதைப் பார் என்பதற்காக பார்வைக்கு வாகனம் வாங்கும் காலமாகி விட்டது.

சிக்கனம் வேறு, கஞ்சத்தனம் வேறு. சிக்கனம் என்பது அநாவசியமாய் செலவழிக்காமல், தேவைகளுக்கும்கூட யோசித்து செலவழிப்பதாகும். கஞ்சத்தனம் என்பது தேவைகளுக்கும்கூட செலவழிக்காமல் இருப்பது. இதில் சிக்கி தவிக்கும் மனிதர் கூட்டம் ஏராளம்.

ஒருவன், ஒன்றை மிகவும் விரும்புகிறான். மற்றொருவன், அதை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. ஒருவனுக்கு ருசிப்பது, மற்றொருவனுக்கு ருசிப்பதில்லை. ஒருவனுக்கு, திட்டமிடுவது என்பது அவனுடைய பலமாயிருக்கிறது. மற்றொருவனோ, திட்டமிடுவதே கிடையாது.

ஒருவன், பேசுகிறான்... பேசுகிறான்... பேசிக் கொண்டே இருக்கிறான். மற்றொருவனோ, வாயைத் திறக்கவில்லை. இரண்டு பேரும் வாழ்கிறார்கள். இரண்டு பேரும் தாங்கள் இப்படி வாழ்வதற்கு காரணங்களை வைத்திருக்கிறார்கள்.

ஒருவனுக்கு, வசப்பட்ட வாழ்க்கை, மற்றொருவனுக்கு வசப்படவில்லை. ஒருவனுக்கு நிஜமாய் இருப்பது, மற்றொருவனுக்கு நிழலாய் இருக்கின்றது.

தங்களிடம் பணம் இல்லாததால், கனவிலேயே வாழும் மனிதர்கள் ஏராளம். அந்த கனவை நிஜமாக்க பாடுபடுகிற கூட்டம் ஒரு பக்கம். அதற்காக குறுக்கு வழியையும், தகாத வழியையும் தெரிந்தெடுக்கின்றது மற்றொரு கூட்டம்.

தன்னை நேசிப்பது போல் பிறனையும் நேசி என்றார் இயேசு கிறிஸ்து. தன்னை நேசிப்பதிலேயே நின்று விட்டது இன்று மனிதர் கூட்டம்.

கொடுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும் என்று பேசுபவனுங்கூட, கொடுக்க மாட்டேனென்கிறான். பணம் இருந்தும், கொடுக்க மனம் இல்லை. மற்றவனுக்கோ, மனம் இருந்தும், கொடுக்க பணம் இல்லை.

ஒருவன், இரவும் பகலும் கடினமாக உழைக்கின்றான். மற்றவன், சோம்பேறித்தனத்தை போர்வையால் மூடிக்கொண்டிருக்கின்றான்.

தன்னைவிட அடுத்தவர்களைப் பற்றி யோசிக்கிற கூட்டம் இன்று அதிகம்.

செய்திகள் வாசிப்பதையும், எழுதுவதையும் தொழிலாகக் கொண்டவர்களையும் மிஞ்சின செய்திகள் சொல்லும் கூட்டம் இன்று அதிகம்.

ஒருவன், பொழுது விடிவதற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றான். மற்றொருவன், இரவிற்காக காத்துக் கொண்டிருக்கின்றான்.

ஒருவன், பொழுதிற்காகக் காத்துக் கொண்டிருக்கின்றான். மற்றவன், பொழுதை போக்கிக் கொண்டிருக்கின்றான்.

ஒருவன், காலத்தை பொன் போலப் பார்க்கின்றான். மற்றொருவன், காலத்தை வீணாய் செலவழிக்கின்றான்.

ஒருவன், யோசித்து செய்கிறான். மற்றவன், யோசிக்காமலே செய்கிறான். இரண்டு பேரும் வாழ்கிறார்கள். ஒருவன் கஷ்டப்பட்டு செய்வதை, மற்றவன் எளிதாகச் செய்கிறான்.

> “ஒருவனுக்கு, வசப்பட்ட வாழ்க்கை, மற்றொருவனுக்கு வசப்படவில்லை. ஒருவனுக்கு நிஜமாய் இருப்பது, மற்றொருவனுக்கு நிழலாய் இருக்கின்றது.”

பிரபலத்திற்காக, புகழுக்காக, அந்தஸ்திற்காக, பணத்திற்காக, பதவிக்காக மனிதன் பிரயாசப்படுகிறான். அதை அடைந்தும் விடுகின்றான். எல்லாவற்றையும் விட்டுவிட்டு உலகைக் கடந்து செல்கின்றான். இதை ஒரு மனிதனும் யோசித்துப் பார்ப்பதில்லை.

தன்னை இப்படியாகக் காட்டிக்கொள்ள வேண்டும், தன்னை எல்லோரும் இப்படியாகப் பார்க்க வேண்டுமென்று பிரயாசப்படும் மனிதன், எல்லாவற்றையும் விட்டுச் செல்கின்றான். அவனை உலகம் மறந்து விடுகிறது.

சும்மா இருக்க ஒரு மனுஷ னாலும் முடியவில்லை. தான், தானாக இருக்க முயற்சி செய் வோர் வெகு சிலரே. தண்ணீரை ருசித்துப் பார்ப்போர் ஒரு சிலரே. தன்னைச் சுற்றி காற்று இருக்கும் போது அதை நினைத்துப் பார்க்காத மனிதன், அது இல்லாதபோதுதான் அதை நினைத்துப் பார்க்கின்றான்.

மனிதனுடைய வாழ்க்கையைப் பற்றியே வேதம் பேசு கிறது. நம்மை உண்டாக்கினவர், வாழ்க்கை என்ற பிரமாணத்தை உருவாக்கினவர் எழுதின வார்த்தைகளே வேதத்தின் வார்த்தைகள். நம்மை நாம் அறிந்துகொள்ள, புரிந்து கொள்ள, நமது வாழ்க்கையைப் பற்றி சரியாக அறிந்து கொள்ள இன்றே வேதத்தைப் படிப்போம். வேதத்தைப் படிக்கும் போது இயேசு நம்மோடு பேசுவார். ஆமென். ■


## FORM IV

| | | |
|---|---|---|
| Place of Publication | : | A -1, Deju Plaza, 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015 |
| Periodicity | : | Monthly |
| Printer's Name | : | Jolly Peter |
| Nationality | : | Indian |
| Address | : | New No. 96, Old No. 223, Peters Road, Royapettah, Chennai - 600 014. |
| Editor's Name | : | Nija Kennedy |
| Nationality | : | Indian |
| Address | : | A -1, Deju Plaza, 2, South Avenue, Srinagar Colony, Saidapet, Chennai - 600 015 |
| Owner's Name | : | S. Paulraj Kennedy |

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 31. 03.2014

Publisher
S. Paulraj Kennedy